


மதுரை மாநகர் மாவட்ட திமுக மதுரை தெற்கு சட்டமன்ற தொகுதி சார்பில் மதுரை முனிச்சாலையில் நடைபெற்ற தமிழ்நாடு தலைகுனியாது மாபெரும் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ தலைமையில் காமராஜபுரம் பகுதி செயலாளர் ஆர்.எம்.முத்து வரவேற்க தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன், தலைமை தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.ஜெயராம், தீர்மானகுழு செயலாளர் அக்ரி கணேசன் உள்ளிட்டோர் முன்னிலையில் சிறப்புரையாற்றினார். மேலும் இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள் மூவேந்திரன், முருகவேல், போஸ் முத்தையா, முகேஷ் சர்மா, அன்வர் உசேன், ரமேஷ் குமார் என்ற ஜீவன், விஜயலட்சுமி பாண்டியன், செய்யது அபுதாஹிர், அருண்குமார், ஏ.ஆர். சௌந்தர்ராஜன், அன்பு என்கிற துரை கோபால்சாமி, சுப்பிரமணி, உஸ்மான் அலி, அருண்பாலாஜி, ராமபிரசாத், சுந்தரேஸ்வரர், சடையாண்டி, கணேசன், முருகன், சுரேஷ், பாலாஜி, செல்வராஜ், பாலகுமார், பாண்டியன், ராஜேந்திரன், ரவி, சசிகுமார், செல்வபிரகாஷ் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.



திருச்செந்தூர் வட்டம் கர்ப்பிணிப் பெண்களுக்கு தமிழ்நாடு அரசின் சமுதாய வளைகாப்பு நிகழ்வினை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் துவங்கி வைத்தார். நிகழ்வில் திருச்செந்தூர் ஒன்றிய கழக செயலாளர் ஏ.பி.ரமேஷ், நகர் மன்ற தலைவர் சிவ ஆனந்தி ரமேஷ், நகரச் செயலாளர் வாள் சுடலை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜனகர், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. அரசையும் துணை போகும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கண்டன ஆர்ப்பாட்டம் பாளை தலைமை தபால் நிலையம் முன்பு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் முருகன்,முன்னாள் அமைச்சர் மைதீன் கான்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்எஸ்.லட்சுமணன் பேச்சிப்பாண்டியன்,மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்,கிரிஜா குமார்,மாநகர பொறுப்பாளர்கள் சு.சுப்பிரமணியன்,தினேஷ்,மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள்,மேயர்.ராமகிருஷ்ணன் துணை மேயர் ராஜ் உள்பட கழக நிர்வாகிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்டம் தொண்டி பேரூர் கழகத்தை சேர்ந்த இளைஞர்கள் பல்வேறு மாற்று கட்சியிலிருந்து இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் தலைமையில் வழக்கறிஞர் ஜெ.நவ்ஃபல் ஆதம் முன்னிலையில் திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைத்து கொண்டனர் இந்நிகழ்வில் தொண்டி பேரூர் கழக துணைச் செயலாளர்கள் மற்றும் வார்டு கவுன்சிலர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி நகர தி.மு.க.சார்பில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து கொடி மரதிடலில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், நகர செயலாளர் சாதிர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் பங்கேற்று கண்டன உரையாற்றினார். நிகழ்வில் தென்காசி தொகுதி பார்வையாளர் கலை கதிரவன், பழனிநாடார் எம்.எல்.ஏ.உள்பட கழக நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




விருதுநகர் மேற்கு ஒன்றியத்தில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாஜக வுக்கு துணை போகும் அதிமுகவை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், விருதுநகர் மேற்கு ஒன்றியம் சங்கரலிங்கபுரம் கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் தலைமையில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகளோடு இணைந்து நடைபெற்றது. மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள் பல்வேறு சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.



சிவகங்கை நகர் சண்முக ராஜா கலை அரங்கில் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து நகர் கழக செயலாளர் சி.எம்.துரை.ஆனந்த் தலைமையில் கண்டண ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் எம்.எல்.ஏ. வே.ராஜசேகரன், ஒன்றிய செயலாளர்கள் எம்.ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், பெ.மந்தக்காளை மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.






தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், சிங்கிலிபட்டி கிராமத்தில் ரூ.16.74 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் திறந்து வைத்தார்.நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, புதூர் ராதாகிருஷ்ணன், மாவட்ட பிரதிநிதி முருகேசன், தொழிலதிபர் சென்னை செல்வகுமார், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கலந்து கொண்டனர்.




விருதுநகரில் அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பாக மறியல் போராட்டம் நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் கைது விருதுநகர் தேசபந்து மைதானம் முன்பு அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பாக மறியல் போராட்டம் அரசு போக்குவரத்து கழக தொமுச பொதுச் செயலாளர் ராஜா செல்வம் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட கவுன்சில் செயலாளர் மாடசாமி இருந்தார்.